பாகிஸ்தானில், பெர்வேஸ் முஷாரப் தலைமையிலான இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டு இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது.

இதனையொட்டி, உலக நாடுகள் பலவும் அங்கு ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்படுவதன் அவசியம் குறித்து வலியுறுத்தி வருகின்றன.

நவாஷ் ஷெரீப் பிரதமர் பதவி வகித்துவந்த போது, கடந்த வருடம் இதே தினத்தில் அப்போதைய இராணுவத் தளபதி பெர்வேஸ் முஷாரப் தலைமையிலான குழு, சதிப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியமை தெரிந்ததே.

இதேவேளை, பாகிஸ்தானில் தற்போது 4 வது தட்வையாக இராணுவ ஆட்சி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## அம்புலன்ஸ் அன்பளிப்பு

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் அமைந்துள்ள 3 அரச மருத்துவ மனைகளுக்கு, யுனிசெப் நிறுவனம் அம்புலன்ஸ் வண்டிகளை வழங்கியுள்ளது.

மல்லாவி, கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதி மருத்துவமனைகளுக்கே இவ் அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து, இவற்றை உரிய இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்

### இடதுசாரி கிளர்ச்சியாளர்,

# கொலம்பியாவில் அடாவடி பலர் கொலை; கிராமங்கள் தீக்கிரை

[இலண்டன்]

கொலம்பியாவில் இடதுசாரி கிளர்ச்சியாளர்களுக்கும் பொது மக்களுக்கும்இடையே நடந்த மோதல்களில்13 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

இம் மோதல் சம்பவத்தின் போது, கொலம்பியாவின் [illegible] உள்ள கிராமங்கள் பல எரியூட்டப்பட்டுள்ளதுடன், அப்பகுதி வாழ் மக்களின் சொத்துகளும் சூறையாடப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பாவிப் பொது மக்களில் பலர், அகதிகளாகவேறிடங்களுக்கு இடம் [illegible]

இடது சாரி கிளர்ச்சிக் குழுவைச் சேர்ந்த பலர், கிராமங்களுக்குள் புகுந்து பலவந்தமாக இளைஞர்களைக்கடத்த முற்பட்ட வேளை இரு பகுதியினர்க்குமிடையே மூண்ட மோதல்களினாலேயே மேற்கண்ட அனர்த்தங்கள் நிகழ்ந்திருப்பதாய் தெரியவந் [illegible]

## இதுவரையில்...

### இரத்தினபுரி மாவட்டம்
(இரக்குவான)

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 28497 |
| ஐ.தே.க | 27685 |
| ம.வி.மு | 1937 |

### காலி - வடேகம

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 31845 |
| ஐ.தே.க | 23548 |
| ம.வி.மு | 3937 |

### பகியங்கனை

| | |
|---|---|
| ஐ. தே. க. | 28850 |
| பொ.ஜ. ஐ. மு. | 17792 |
| ஜே.வி . பி | 2990 |

### மிரிகம

| | |
|---|---|
| பொ. ஜ. ஐ. மு | 33116 |
| ஐ. தே. க | 30025 |
| ஜே. வி. பி | 6732 |

### லக்கல

| | |
|---|---|
| பொ. ஜ. ஐ. மு | 23592 |
| ஐ. தே. க | 14941 |
| ஜே. வி. பி | 1283 |

### தொமுங்ஸ்கந்த

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ | 18208 |
| ஐ.தே.க | 16951 |
| ஜே.வி.பி | 3155 |

### கல்முனை

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 23459 |
| ஐ.தே.க | 12300 |
| ஜே.வி.பி | 5480 |

### ஊவாபறணஹம

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 18162 |
| ஐ.தே.க | 11582 |
| ஜே.வி.பி | 1815 |

### அக்குறஸ

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 30639 |
| ஐ.தே.க | 21688 |
| ஜே.வி.பி | 5875 |

### காலிமாவட்டம்
### கத்தகம

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 26619 |
| ஐ.தே.க | 19910 |
| ம.வி.மு | 4274 |

### மாத்தறை - கத்மன

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 28636 |
| ஐ.தே.க | 21728 |
| ம.வி.மு | 4522 |

### மாத்தளை
### தம்புள்ளை

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 35421 |
| ஐ.தே.க | 30,455 |
| ம.வி.மு | 439 |

### திருமலைமாவட்டம்6
### திருகோணமலை

| | |
|---|---|
| ஐ.தே.க | 12861 |
| பொ.ஜ.ஐ.மு | 11928 |
| த.வி.கூ | 11070 |
| ஈ.பி.டி.பி | 3382 |
| த.காங் | 3269 |

### திருமலை-சேருவில

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு. | 18517 |
| ஐ.தே.க | 14489 |
| ம.வி.மு | 2056 |
| த.வி.கூ | 944 |
| ஈ.பி.டி.பி | 316 |

### கம்பஹா-மாவட்டம்

படுகாயமடைந்தனர்.

இம் மோதல் சம்பவத்தின் போது, கொலம்பியாவின் தென்மேற்குப் பகுதியில் பொது மக்களில் பலர், அகதிகளாகவேறிடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

கண்ட அனர்த்தங்கள் நிகழ்ந்திருப்பதாய் தெரியவந்துள்ளது. (உ-த)

எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. (உ)

## புதிய புலமைப் பரிசில் திட்டம் ஜனாதிபதியால் ஆரம்பித்துவைப்பு

(கொழும்பு)

க.பொ.த(சா/த)பரீட்சையில் சித்தியடைந்து மேற்படிப்பை தொடரமுடியாத, திறனாற்றல் மிகுந்த மாணவர்களின் நலன்கருதி ''சஹச்சிர''எனும் புதிய தொரு புலமைப்பரிசில் திட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆரம்பித்துள்ளார்.

மாதாந்தம் 240ரூபாவீதம் மொத்தம் 24மாதங்களுக்கு, உயர்தரப்படிப்பு முடியும் வரை இப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இலங்கையிலுள்ள 91கல்வி வலயங்களுக்கும் தலா 60 மாணவர்கள் வீதம் மொத்தம் 5460 மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)


## டைனமோ தேவை

### 20 கே. வி. வலுவுள்ள 3 பேஸ்

டைனமோ உடன் தேவை

விற்பனைக்கு வைத்திருப்போர் நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**'வலம்புரி'**

**இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்**


## கற்பிட்டிய பிரதேச சபை தலைவர் இல்லம் மீது கிரனேற் வீச்சு

[கொழும்பு]

கற்பிட்டிய பிரதேச சபை தலைவரின் இல்லம் மீது நேற்று முன்தினம்மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தக்குதலில்அவரது மகன் ஸ்தலத்தில் உயிரிழந்தார் தலைவரும் மனைவியும் மயிரிழையில் உயிர்தப்பினார்.

கற்பிட்டிய டியகித்துல்ல என்ற கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. [க-ந]

## லிபரல் கட்சியின், வாக்களிப்பு நிலைய முகவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை

### இரத்தினபுரியில் சம்பவம்

(கொழும்பு)

லிபரல் கட்சியின் வாக்களிப்பு நிலைய முகவர் ஒருவர் கடமையிலிருந்த சமயம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் 2 மணியளவில் இரத்தினபுரி வெல்மதுளை என்ற இடத்தில், மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஆயுதம் தாங்கிய இனம் தெரியாத குழுவினர், லிபரல் கட்சியின் முகவரைச் சுட்டுக்கொன்றதுடன், அங்கு கடமையில் இருந்த ஏனையோரையும் தாக்கிவிட்டுச் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

| | |
|---|---|
| ஈ.பி.டி.பி | 316 |

**கம்பஹா-மாவட்டம்**

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 45394 |
| ஐ.தே.க. | 27794 |
| ம.வி.மு | 8294 |

**கம்பஹா-மாவட்டம்**

**களனி**

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 24734 |
| ஐ.தே.க | 24045 |
| ம.வி.மு | 5651 |

**குருநாகல் மாவட்டம்**

(திக்கவரெட்டி)

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 25837 |
| ஐ.தே.க | 22852 |
| ம.வி.மு. | 2607 |

**குருநாகல் மாவட்டம்**

(யாப்பகூவ)

| | |
|---|---|
| பெ.ஜ.ஐ.மு | 30832 |
| ஐ.தே.க | 28227 |
| ம.வி.மு | 3824 |

**இரத்தினபுரிமாவட்டம்**

(கொலன்ன)

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 36592 |
| ஐ.தே.க | 33729 |
| ம.வி.மு | 7895 |

**கம்பஹா-மாவட்டம்**

(தோம்பே)

| | |
|---|---|
| பொ.ஜ.மு | 35897 |
| ஐ.தே.க | 25053 |
| ம.வி.மு | 4576 |

**கம்பஹா**

**திவிலிபிட்டிய**

| | |
|---|---|
| பொ.ஜ.ஐ.மு | 32294 |
| ஐ.தே.க | 28899 |
| ம.வி.மு | 3284 |

''காலம் கருதி இருப்பார் கலங்காது ஞாலம் கருதுபவர்''

-குறள்-

# வலம்புரி

## திருமலை தந்த பாடம்

தமிழர்களின்இன்றைய நிர்க்கதி நிலைக்குதனித்து சிங்களப் பேரினவாதிகளை மட்டும் குற்றம் சாட்டுவது நியாயமாகாது தமிழ் அரசியல்வாதிகளும் ஆயுதக் குழுக்களும் தமக்குள் முட்டிமோதிக்கொள்வதும் ஒரு காரணம் என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இதற்கு நேற்று முன்தினம் நடந்த பொதுத் தேர்தல் நல்லதோர் உதாரணமாகும். தமிழ்த்தேசத்தின் தலைநகரான திருகோணமலையில் தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பறிபோயுள்ளது இது இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழினத்திற்கு ஏற்பட்ட ''வரலாற்று துயரமாகும்''

காலாகாலமாக திருமலையில் கட்டிக்காக்கப்பட்ட இறைமை தமிழ்க் கட்சிகளுக்கிடையே நிலவிய போட்டியினால் -ஒற்றுமையின்மையால் பறிபோனது என்பதை எண்ணும்போது சர்வதேசத்தின் முன் தமிழ்ச் சமூகம் வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது.

ஒரு புறத்தில் ஒரு சாரார் தமிழ் மண்ணுக்கு தம் உடலைத்தியாகம் செய்ய, மறுபுறத்தில் தமிழ்க் கட்சிகள் கோடரிக் காம்பாக செயற்படுவது தமிழர்களின் சாபக்கேடு என்றே சொல்ல வேண்டும்.

தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் நம் தேசத்தின் நலன் கருதி ஒன்று சேர்ந்து போட்டியிட்டிருந்தால் திருமலையில்தமிழர் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட்டிருக்கும். ஆனால் சுயநலத்தையே

★ திருமலை தேர்தல் முடிவுகள்

# அப்பகுதி தமிழரின் எதிர்காலத்தை இருளடையச் செய்யும்

### அரசியல் நோக்கர்கள் கருத்து

(திருகோணமலை)

திருமலை மாவட்ட தேர்தல் முடிவுகள் அப்பகுதிவாழ் தமிழரின் எதிர்காலத்தை இருளடையச் செய்யலாம் என அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி 53 ஆயிரத்து 753 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 46 ஆயிரத்து 438 வாக்குகளையும் பெற்று அங்கு வெற்றிவாகை சூடியுள்ளது.

வழக்கத்திற்கு மாறாக, தமிழர் விடுதலைக் கூட்டணி 14 ஆயிரத்து 79 வாக்குகளை மட்டுமே பெற்று, அம்மாவட்டத்தில் எந்தவொரு பிரதிநிதித்துவத்தையும் பெற முடியாத நிலையை எய்தியுள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் தமிழர் சார்பான கட்சி இவ்விதமான பின்னடைவைச் சந்தித்துள்ளமை இதுவே முதல்தடவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-உ)

## ஊழல் ஒழிப்பு ஒப்பந்தத்தில் ஐ. தே. க பிரமுகர்கள் கைச்சாத்து

[கொழும்பு]

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தவிசாளர் கருஜெயசூரிய, செயலாளர் காமினி அத்துக்கோறள ஆகியமூவரும் ஊழல் ஒழிப்பு ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ளரணில்விக்கிரமசிங்கவினுடைய வீட்டில் வைத்து நேற்று கொழும்பு மேஜர் ஒமர் ஹமீல் முன்னிலையில் ஒப்பந்தம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

எந்த ஒரு எம்.பியும் இந்த ஒப்பந்தத்தை மீறினால் தன் பதவியிலிருந்து அவர் தானகவே விலகுவதுடன், கட்சியிலிருந்தும் ஒதுங்கிவிட வேண்டும் என்றும் ஒப்பந்தத்தில் வாசகம் எழுதப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-4)



## சாயி அருளமுதம்

ஒவ்வொன்றிலும் நம்பிக்கை இருத்தல் வேண்டும். சிலர் மூட நம்பிக்கை என்கிறார்கள். நம்பிக்கையின்றி வேறு எவரால் வாழ முடியும். காலைவிழித்தெழுந்தது முதல் உறங்கச் செல்லும் வரை ஒவ்வொரு வேலையையும் நம்பிக்கையையோடுதான் செய்கின்றோம். ஆனால் தெய்வத்தின் மீது தான் நம்பிக்கை இல்லை.

ஒருசித்தாந்தி(சோதிடன்)எழுதிய பஞ்சாங்கத்தை நம்பி தர்ப்பணங்களைச் செய்கின்றோம். ஏகாதஷிஎன விரதங்களைக் கடைப்பிடிக்கிறோம். ஆனால் தத்துவம் அஸி, பிரஞ்ஞானம் ப்ரஹ்ம, அஹமாத்மாப்ரஹ்ம, அஹம்ப்ரஹ்மாஸ்மி என வேதங்கள் மணிஓசை போன்று கூறிக் கொண்டு இருந்தால் அதை நம்புவதில்லை. நிலையற்றவைகளை எளிதில் நம்பிவிடுகிறார்கள். என்றைக்கும்நிலையானதைநம்புவதில்லை. இந்தப் பலஹீனத்தை அகற்றிக் கொள்ள வேண்டும்.

சனாதனசாரதி

## அனுராதபுரப் பகுதியில் கோஷ்டி மோதல் நான்கு பேர் படுகாயம்

அனுராதபுரம் பகுதியில் ஐக்கிய முன்னணி ஆதரவாளருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளருக்கும் இடையில் ஏற்பட்ட

அடைந்தது.

காயமடைந்தோர் உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதுவிடயம் தொடர்பாக

## 203 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையை நேற்று முன்தினம் வந்தடைந்தசெஞ்சிலுவைச் சங்க கப்பலில் யாழ்.குடா நாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 203தபால்பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இதேவேளை வெளியூர்களுக்கான தபால்கள் அடங்கிய 41-பொதிகள் இங்கிருந்து அனுப்பப்பட்டுள்ளது.

இங்கு எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு விநியோகப் பணி மேற்கொள்ளப்பட்டதாக யாழ். தபாலகவட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் தற்போதையதேர்தல் சூழ்நிலையில் எதிர்வரும் சனிக்கிழமைவரை விமான தபால் சேவை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பிரதமதபாலதிபர் ச.மார்க்கண்டன் தெரிவித்தார். (3-12)

## ஐ. சி. ஆர். சி.பணிமனை மூதூரில் மீண்டும் இயங்கும்

### தலைவர் தெரிவிப்பு

(திருகோணமலை)

மூதூர் பகுதியில் உள்ள ஐ. சி. ஆர். சி பணிமனையினை மீண்டும் திறந்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக திருமலை மாவட்டஐ. சி. ஆர். சியின் அதிகாரிபுஸ்பராசா தெரிவித்துள்ளார்.

மூதூரில் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்துஏற்பட்ட ஆர்பாட்டத்தின்போது ஐ. சி. ஆர்.சிபணிமனையும் அடித்துச் சேதமாக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-4)

### இளம் தாய்க்கு

## இரத்தம் வழங்கி உயிரைக் காத்த ஐ. நா வதிவிடப் பிரதிநிதி

(வவுனியா)

உடனடியாக இரத்தம் தேவைப்பட்ட இளம் தாய்க்கு, இரத்ததானம் வழங்கி அவரது உயிரைக் காப்பாற்றினார். ஐக்கிய நாடுகள் சபையின் வன்னிக்கான வதிவிடப் பிரதிநிதி. மல்லாவி மருத்துவமனையில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றித்தெரியவருவதாவது,

ஒரே தடவையில் இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த இளந்தாய் ஒருவருக்கு உடனடியாக இரத்தம் ஏற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவருக்குத் தேவைப்பட்டது ''ஓ''வகை இரத்தமாகையால், உடனே பெற்றுக்கொள்ள இயலவில்லை.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த வன்னிக்கான ஐ.நா.அமைப்பின் வதிவிடப் பிரதிநிதி, செல்வி அலெக்ஸாண்டன்ஸியா இரத்தம் வழங்கி அவ் இளம் பெண்ணின் உயிரைக்காக்க உதவினார்.

(உ)

## கலட்டிப் பகுதியில் கோஷ்டி மோதல் நால்வர் வைத்தியசாலையில்

பாற்றப்பட்டிருக்கும். ஆனால் சுயநலத்தையே அடிப்படையாகக் கொண்ட அக்கட்சிகளால் தமிழ்தேச நலன் கருதி ஒன்று சேர முடியாது போயிற்று. ஒன்றுசேராது -தனித்தனியே திருமலையில் போட்டியிட்ட தமிழ்க் கட்சிகள் செய்த தேசத் துரோகத்தைத் தமிழினத்தின் எதிர்காலச் சந்ததி ஒருபோதும் மன்னிக்கப்போவதில்லை.

தமிழர்களுக்காக- தமிழ் மண்ணுக்காக என்றெல்லாம் பிரச்சார முழக்கம் செய்தவர்கள் -இன்று திருமலையில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை சிங்களப் பேரினவாதிகளிடம் தாரைவார்த்து கொடுத்து விட்டனர்.

இந்நிலை இனிமேலும் தொடராமல் இருக்க வேண்டுமாயின் தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து தமிழர்களின் உரிமைக் காக, அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அடக்கு முறைக்கெதிராக குரல் கொடுக்க வேண்டும்.

நமக்குள் ஒற்றுமையின்மையால் திருமலையில் ஏற்பட்ட இழப்பை நல்லதொரு பாடமாக கொண்டு செயற்பட்டால் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையாவது எதிர்காலத்தில் காப்பாற்ற முடியும்.

ருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளருக்கும் இடையில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் நான்கு பேர் காயமடைந்தனர். வாகனம் ஒன்று பலத்த சேதம் டியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதுவிடயம் தொடர்பாக பொலிஸார் துரிதவிசாரணைகள் மேற்கொண்டுவருகின்றனர். (க-5)

## மொனறாகல மாவட்டம்

# பொ.ஐ.ஐ.முன்னணி-03 ஆசனம் ஐ.தே. கட்சி - 02 ஆசனம்

(கொழும்பு)

மொனறாகல மாவட்டத்தின் இறுதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி 91,404வாக்குகளைப் பெற்று 03 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு 75ஆயிரத்து 900 வாக்குகள் கிடைத்த நிலையில் 02 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணிக்கு 13ஆயிரத்து 150 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. (க-வை)

## திகாமடுல்ல மாவட்டம்

# பொ.ஐ.ஐ. முன்னணிக்கு- 04 ஐ.தே.கட்சி-02

திகாமடுல்ல மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு 04 ஆசனங்களும், ஐக்கிய தேசிய கட்சிக்கு 02 ஆசனங்களும், சுயேட்சைக் குழு- 02 இற்கு 02 ஆசனமும் கிடைத்துள்ளது.

இத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி 1,36,423 வாக்குகளையும், ஐக்கிய தேசியக்கட்சி 10,1628வாக்குகளையும், சுயேட்சைக் குழு 02 19,812 வாக்குகளையும் பெற்றுள்ளது. (க)

# நால்வர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிறவுண்வீதி கலட்டிச்சந்தியில் நேற்றுமாலை இடம் பெற்ற கோஷ்டி மோதலில் நான்குபேர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6-00மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மகாலிங்கம் பாலசுந்தரம் (வயது 37) சிவசுப்பிரமணியம் தர்மேந்திரன் (வயது 18), சீவரட்ணம், ஜிறோஜன்(வயது15), இராஜப்பு யூஜின் வளன் (வயது 18) ஆகியோர் படுகாயமடைந்தவர்களாவர்.

இது குறித்து மேலும் தெரியவருதாவது நேற்றுமாலை 5-20 மணியளவில் கார் ஒன்றில் வந்த கோஷ்டியினர். வீதியில் நின்ற இளைஞர் ஒருவரை காரினால் மோதியதுடன் தாம் ஈ.பி.டி.பி. அமைப்பைச் நேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொண்டு அந்த இளைஞரை கண்டபடிதாக்கியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் ஆவேசத்துடன் காரில்வந்தவர்களைத் தாக்கியதை அடுத்து மோதல்கள் வெடித்தன.

அதனை யடுத்து காரில் வந்த இளைஞர்கள் தப்பிச் சென்று மேலதிக ஆளணிகளுடன் வான் ஒன்றில் மாலை 6 மணியளவில் திடீரென திரும்பிவந்து அங்கு நின்றவர்களை கத்தி, வாள், அலவாங்கு மற்றும் கோடரி, கற்கள்போன்றவற்றால் படுபயங்கரமான முறையில் கண்டபடி தாக்கியுள்ளனர்.

ஈ. பி. டி. பி. அமைப்ப என்று கூறிக்கொண்டு வந்தவர்களே தம்மைத் தாக்கியதாக காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ந-4

★ யாழ். மாவட்டத் தேர்தல் முடிவுகள்

# ஈ.பி.டி.பி4; கூட்டணி3 ஐ.தே.க1; காங்கிரஸ்1

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த 11 வது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தின் 9 இடங்களில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 04 இடங்களையும், தமிழர் விடுதலைக்கூட்டணி 03 இடங்களையும், ஐக்கிய தேசிய கட்சி-01 இடத்தையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி-01 இடத்தையும் பெற்றுள்ளது.

நேற்றைய வாக்களிப்பின் போது யாழ். மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 69 பேர்வாக்களித்துள்ளனர்.

இவ்வாக்குகளில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி41 ஆயிரத்து 671 வாக்குகளும், தமிழர் விடுதலைக் கூட்டணி 32 ஆயிரத்து 852 வாக்குகளும், ஐக்கிய தேசியக் கட்சி 11 ஆயிரத்து 431 வாக்குகளும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 10 ஆயிரத்து 648 வாக்குகளும் பெற்றுள்ளன.

## ...ன்னி

படி அமைப்பினரின் வெற்றி குறிப்பிடத்தக்கதாகவே அமைந்துள்ளது.

ஏனைய குழுக்களான ஈ.பி ஆர்.எல்.எவ் (சுரேஸ் அணியினர், மற்றும் வரதர் அணியினர்) அமைப்பினர், புளொட் அமைப்பினர் தோல்வியை தழுவியுள்ளதுடன் ஏற்கனவே கைப்பற்றியிருந்த ஆசனத்தையும் புளொட் அமைப்பு இழந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## பொது...

தேவானந்தாவும் அக்கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் வி.கே. ஜெகனும் கூட்டாக விடுத்த அறிக்கையிலேயே தமது நன்றியை தெரிவித்துள்ளனர்.

மக்களுடன் மக்களாக இருந்து ஈ.பி.டி.பி. தனது மக்கள் சேவையை முன்னெடுத்துச் செல்லும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் எமது மக்கள் சேவையில் தம்முயிர் நீத்த தோழர்களையும் பிரதேசசபை உறுப்பினர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## ...ரசாங்கம்...

கிடைத்துள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செல்வாக்குப் பெற்ற அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியீட்டியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேபோல் இக்கட்சியினை ஆதரிக்கும் பொலநறுவை மாவட்டத்திலும் ஐக்கிய தேசியக்கட்சி சில தொகுதிகளை கைப்பற்றியுள்ளது.

மேல் மாகாணத்தின் களுத்துறை, கம்பஹாமாவட்டத்திலும் ஆளும் பொதுஜன ஐக்

## சிற்றி ஒவ்

றவர்கள் நாளைக் காலை 7.30மணிக்குபயணஆயத்தங்களுடன் யாழ். சிங்கள மகா வித்தியாலயத்திற்கு சமுகம் அளிக்குமாறுசிவில் நிர்வாகக் காரியாலயம் கேட்டுள்ளது.

இதேவேளை யாழ், பல்கலைக் கழகத்தில் கடந்த 6 ஆம்திகதி இடம்பெற்ற பட்டமளிப்பிற்காக வந்திருந்த மாணவர்களில் அநேகர் இக்கப்பலில் பயணம் செய்யவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந - 4

## பொதுத்தேர்தலில்

தேர்தல் முடிவுகள் நேற்று வரை உத்திபூர்வமாகஅறிவிக்கப்படல் ஒத்திப்போடப்பட்டது.

இதுவரையில் அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகளின் படி ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி 109 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 90 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி 10 ஆசனங்களையும் தக்க வைத்துளள நிலையில் தேர்தல் முடிவு உத்தியோக பூர்வமாக அறிவிப்பது ஒத்தி வைக்கப்படுவதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா நேற்றிரவு தெரிவித்துள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள தேர்தல் முடிவின்படி வீதாசார ரீதியாக பொதுஜன ஐக்கிய முன்னணி 46.03 வீத வாக்கையும், ஐக்கிய தேசியக் கட்சி 40.75 வீத வாக்குகளையும், மக்கள் விடுதலை முன்னணி 7.6வீத வாக்குகளையும் பெற்றுள்ளதால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஸ்திரத் தன்மையை

## மூன்றாவது...

புக்களையும், அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இதேவேளை கடந்த 7ஆம் திகதி குலசிங்கம், இராஜகாந்தன் ஆகிய இரு இளைஞர்களையும் ஜேர்மனி அரசு இலங்கைக்கு திருப்பிஅனுப்பியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ந. 4

## பிரதமர்

பூதவுடல் தாங்கிய வாகனம் செல்லும்வீதிகள் யாவும் தற்காலிகமாக மூடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. விஜயராம மாவத்தை, றொஸ்மீட்பிளேஸ், நோட்டன் பிளேஸ் ஆகியவற்றின் ஊடாக செல்லும் வீதிகள் யாவும் மு.பகல் 10.30 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை மூடப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் காலஞ்சென்ற பிரதமரின் பூதவுடலிற்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு பிரமுகர்கள் உட்பட பலரும் தமது இறுதி அஞ்சலியை செலுத்திய வண்ணம் உள்ளனர்.

## மாமனிதர்...

தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கலாநிதி ந. குமரகுருபரன் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது நாம் ஆயுதம் ஏந்தவில்லை ஆயுதப் பாதுகாப்பை ஏற்கவுமில்லை,

அச்சுறுத்தல்களை ஏற்படுத்தவில்லை அவ்வகையில் எமக்குக்கிடைத்த வாக்குகள் களங்கமில்லாதவை.

நாம் எமது பணியை நியாயமாகத்தொடர்வோம். உங்களோடு உடனிருந்து எங்கள் பிரதிநிதி பணியாற்றுவார் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்

## நியூசிலாந்து அணி வெற்றி

(நைரோபி)

நைரோபியில் நடைபெற்று வரும் மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியை 4 விக்கற்றுக்களால் நியூசிலாந்து அணி வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கற்றுக்களைஇழந்து 252 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பதிலுக்கு களமிறங்கிய நியூசிலாந்து அணி 49 ஓவர்களில் 6 விக்கற்றுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

(வி - 4)

## தேர்தல் முடிவுகள்

**களுத்துறை மாவட்டம்**

பொ.ஐ.மு - 5 ஆசனம்
ஐ.தே.க - 4 ,,
ம.வி.மு - 1 ,,

**பதுளை மாவட்டம்**

பொ.ஐ.மு - 3 ஆசனம்
ஐ.தே.க - 5 ,,

**பொலநறுவை மாவட்டம்**

பொ.ஐ.மு. - 2 ஆசனம்
ஐ.தே.க - 3 ,,

**நுவரெலியா மாவட்டம்**

பொ.ஐ.மு - 4 ஆசனம்
ஐ.தே.க - 3 ,,

**கம்பஹா மாவட்டம்**

பொ.ஐ.மு - 10 ஆசனம்
ஐ.தே.க - 7 ,,
ஜே.வி.பி - 1 ,,

**மொனராகல மாவட்டம்**

பொ.ஐ.மு - 3 ஆசனம்
ஐ.தே.க - 2 ,,

**திகாமடுல்லமாவட்டம்**

பொ.ஐ.மு - 4 ஆசனம்
ஐ.தே.க - 2 ,,
சுயேட்சைகுழு - 1 ,,

**கொழும்பு மாவட்டம்**

பொ.ஐ.மு. - 10 ஆசனம்
ஐ.தே.க - 8 ,,

**புத்தள மாவட்டம்**

பொ.ஐ.மு - 5 ஆசனம்
ஐ.தே.க - 3 ,,

**அம்பாந்தோட்ட மாவட்டம்**

ஐ.தே.க - 4 ஆசனம்
பொ.ஐ.மு - 2 ,,

**இரத்தினபுரி மாவட்டம்**

பொ.ஐ.ஐ.மு - 6 ஆசனம்
ஐ.தே.க - 4 ,,

**யாழ். மாவட்டம்**

ஈ.பி.டி.பி - 4 ஆசனம்
த.வி.கூ - 3 ,,
ஐ.தே.க - 1 ,,
த.கா - 1 ,,

**மாத்தறை மாவட்டம்**

பொ.ஐ.ஐ.மு - 5 ஆசனம்
ஐ.தே.க - 2 ,,
ம.வி.மு - 1 ,,

**காலி மாவட்டம்**

பொ.ஐ.ஐ.மு - 5 ஆசனம்
ஐ.தே.க - 4 ,,
ம.வி.மு - 1 ,,

**அனுராதபுர மாவட்டம்**

பொ.ஐ.மு - 5 ஆசனம்
ஐ.தே.க - 3 ,,

**கேகாலை மாவட்டம்**

பொ.ஐ.மு - 5 ஆசனம்
ஐ.தே.க - 4 ,,

**திருமலை மாவட்டம்**

பொ.ஐ.மு - 3 ஆசனம்
ஐ.தே.க - 1 ,,

**வன்னி மாவட்டம்**

த.ஈ.வி.இ - 3 ஆசனம்
தே.ஐ.மு - 1 ,,
ஐ.தே.க - 1 ,,
பொ.ஐ.மு - 1 ,,

**குருநாகல் மாவட்டம்**

பொ.ஐ.மு - 8 ஆசனம்
ஐ.தே.க - 6 ,,
ம.வி.மு - 1 ,,

**மட்டக்களப்பு மாவட்டம்**

த.வி.கூ - 2 ஆசனம்
தே.ஐ.மு - 1 ,,
ஐ.தே.க - 1 ,,
பொ.ஐ.மு - 1 ,,

## கடையிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு ஹொரணையில் சம்பவம்

(கொழும்பு)

ஹொரணையில் உள்ள கடை ஒன்றிலிருந்து வெடி மருந்து மற்றும் வெடிமருந்துத்திரி ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி கடை ஒன்றில் உள்ள மீன்ரின்பெட்டியை பொலிஸார்சோதனைசெய்த போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாகஅக்கடையில் வேலை செய்யும் மலையகப் பகுதியைச் சேர்ந்தமூன்று தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ந-4)

ஸ்ரீ செல்வா

மேல் மாகாணத்தின் களுத்துறை, கம்பஹாமாவட்டத்திலும் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி கணிசமாக வெற்றி பெற்றுள்ளது. மாத்தறை மாவட்டத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் ஐயாயிரம் முதல் பத்தாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

திகாமடுல்லை, அம்பாறை மாவட்டங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றுள்ளது. மேல் மாகாணத்தில் சில தொகுதிகளில் சிஹல உறுமய கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளது. வடக்கு-கிழக்கில் தமிழர் விடுதலைக்கூட்டணி தனது செல்வாக்கை முற்றாக இழந்துவிடவில்லை என்பதனை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டுவனவாக உள்ளபோதிலும் திருமலை மாவட்டத்தின் முடிவுகள் அப் பகுதி வாழ் தமிழரின் எதிர் காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளதாகவே அரசியல் ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-செ)

களையும் பெற்றுள்ளதால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஸ்திரத் தன்மையை வலுப்படுத்துவதுவதாகவே அமையும் என்றும் பரவலாக நம்பப்படுகிறது.

ஒரு சில மாவட்ட முடிவுகள் மட்டுமேவெளிவரவேண்டிய இந்நிலையில் தேர்தல் தொடர்பாக சில ஒழுங்கீனங்கள் இடம் பெற்றதாக தகவல் கிடைத்ததையடுத்து அரசியல் கட்சி செயலாளர்களுடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்றுஇன்று நடாத்த விருப்பதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது

இதேவேளையில் ஸ்ரீ. ல. சு. கட்சி, ஈ. பி. டி. பிகட்சியினருடன் சேர்ந்து அரசாங்கத்தை அமைக்கப்போவதாக அக்கட்சியின் செயலாளர் அறிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-வ

## பொதுஜன

கிடைத்துள்ளதால் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைப்பதில் எந்தச் சந்தேகமுமில்லையென அரசியல் நோக்குநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)

எங்கள் பிரதிநிதி பணியாற்றுவார் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-2

### யாழ் மாவட்ட

| | |
|---|---|
| த. வி. கூ. | 1327 |
| ஐ. தே. க. | 820 |
| **சாவகச்சேரி** | |
| த. வி. கூ. | 1284 |
| ஈ. பி. டி. பி. | 1256 |
| சுயேச்சைக்குழு – 2 | 1043 |
| **யாழ்ப்பாணம** | |
| ஈ. பி. டி. பி. | 1571 |
| த. வி. கூ. | 1277 |
| ஐ. தே. க. | 581 |
| **பருத்தித்துறை** | |
| அ. இ. த. க. | 2493 |
| ஈ. பி. டி. பி. | 1862 |
| த. வி. கூ. | 5401 |
| ஐ. தே. க. | 978 |
| **கோப்பாய்** | |
| ஈ. பி. டி. பி. | 5044 |
| த. வி. கூ. | 4248 |
| ஐ. தே. க. | 1051 |
| **மானிப்பாய்** | |
| ஈ. பி. டி. பி. | 5737 |
| த. வி. கூ. | 5803 |
| அ. இ. த. கா. | 1160 |
| **வட்டுக்கோட்டை** | |
| ஈ. பி. டி. பி. | 4269 |
| த. வி. கூ. | 4035 |
| ஐ. தே. க. | 2153 |
| ஜே. வி. பி | 1709 |
| **உடுப்பிட்டி** | |
| த. வி. கூ | 4180 |
| ஈ. பி. டி. பி. | 1662 |
| அ. இ. த. க. | 2024 |
| ஐ. தே. க. | 104 |

போதே இவை கைப்பற்றப்

## துக்கம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் முன்னாள் பிரதமர்ஸ்ரீமாவோபண்டார நாயக்காவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்து முகமாக நேற்று முழுவதும் சோககீதம் இசைக்கப்பட்டது.

இதேவேளை ஸ்ரீமாவின் மறைவிற்கு உலகத் தலைவர் கள்பலரும் தமது அனுதாபங்களைத் தெரிவித்த வண்ணமுள்ளனர். (ந - 5 – 12)


**ஸ்ரீ செல்வா**

(யாழ்ப்பாணம்)

**சூரியா, ஜோதிகா ரகுவரன் நடித்த**

**உயிரிலே கலந்து**

புதிய வெளியீடு CD பிரதி

தினசரி

10–30, 2–30 (ப.நே)

(கி–688)



## உடன் தேவை

★ அனுபவமுள்ள அச்சுக்கோப்பாளர்கள் (இருபாலாரும்).

★ அச்சுக்கோப்புப் பயிலுநர்கள் (ஆண்கள் மட்டும்).

உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**'வலம்புரி'**

இல. 15, வெள்ளாந் தெரு,

யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.